வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 05.11.2025 புதன்கிழமை | இதழ் : 309 | பக்கங்கள் : 08

## "இளஞ்செழியனுக்கு சேவை நீடிப்பு திட்டமிட்டு மறுக்கப்படவில்லை!"

கொழும்பு, நவ. 05
மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், அவரின் சட்டத்துறை சார் சேவைகள் மீது என்றும் எமக்கு மதிப்பும் கௌரவமும் உள்ளது. திட்டமிட்டு அவருக்கான சேவை நீடிப்பு மறுக்கப்படவில்லை. குறித்த காலப்பகுதியில் சேவை நீடிப்புக்கான அவசியம்

07

# மன்னாரில் புதிய காற்றாலைகள் இனிமேல் அமைக்கப்படமாட்டா!

### முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம்


கொழும்பு, நவம்பர் 05
**மன்னார் தீவு மக்களின் விருப்பமின்றி தொடர்ந்தும் அங்கு புதிய காற்றாலை மின் உற்பத்தி கருத்திட்டங்களை முன்னெடுக்காமல் இருப்பது என்று முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

பாராளுமன்ற ரீதியில் மீளாய்வு செய்யப்பட்ட வளங்களின் விரிவாக்கத் திட்டத்துக்கு அமைய, அதிக காற்று ஆற்றல் வளம் கொண்ட பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ள மன்னார் தீவில் மொத்தம் மூன்று காற்றாலை மின்னுற்பத்திக் கருத்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

இவற்றில், ஒரு கருத்திட்டம் தம்பபன்னி காற்றாலை மின்னுற்பத்தி நிலைய நடவடிக்கையாக 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஏனைய

07

## இந்திய நிதி அமைச்சரை நேற்று சந்தித்தார் சஜித்!



புதுடில்லி, நவ. 05
இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.
இந்த சந்திப்பு

07

## நிதி அமைச்சின் முன்னாள் செயலர் உட்பட ஐவர் கைது

கொழும்பு, நவ. 05
நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் சரித ரத்வத்த, கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் களுவதன லலித் தவுலுகல உட்பட ஐவர் நேற்று இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும்

07

## அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு வத்திக்கான் அமைச்சர் பாராட்டு!

கொழும்பு, நவ. 05
பொருளாதார, அரசியல் உறுதித்தன்மையை நிலைநாட்டுவதன் மூலம் நாட்டை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் அரசின் முயற்சிகளுக்கு வத்திக்கானின் வெளிவிவகார அமைச்சர் பேராயர் போல் ரிச்சர்ட் கல்லாகர் பாராட்டு



தெரிவித்துள்ளார்.
உத்தியோகபூர்வ பயணமாக நாட்டுக்கு வருகை தந்துள்ள வத்திக்கானின் வெளிவிவகார அமைச்சர் பேராயர் போல் ரிச்சர்ட் கல்லாகர் நேற்றைய தினம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

07

## பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைவு நிறைவுறவில்லை!

கொழும்பு, நவ. 05
பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை முன்மொழியும் நடவடிக்கை இன்னும் நிறைவு பெறவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.
இது தொடர்பில் அமைக்கப்பட்டுள்ள நிபுணர் குழு கடந்த செப்ரெம்பர் மாதத்தில் புதிய சட்டமூலத்துக்கான முன்மொழிவுகளை நிறைவு செய்வதாக அறிவித்திருந்தது. எனினும், அந்தக் குழு, இன்னும் தமது பணிகளை நிறைவு செய்யவில்லை என்று என நீதி அமைச்சு

07

## 950 கிலோ கஞ்சா தீயிட்டு எரிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 05
யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் கைப்பற்றப்பட்ட 950 கிலோ கஞ்சா நேற்று தீயிட்டு அழிக்கப்பட்டது.
யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம்,

07

## காரைநகர் பெண் கொலை; பிரதான சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், நவ. 05
காரைநகரைச் சேர்ந்த பெண் ஒருவர் கொல்லப்பட்டு சங்குப்பிட்டி கடலில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே நேற்று செவ்வாய்க் கிழமை கிளிநொச்சி

07

## மாவீரர் நினைவேந்தல் ஏற்பாடு; பிரதேச சபை உறுப்பினர் கைது

கிளிநொச்சி, நவ. 05
கடந்த வருடம் மாவீரர் நினைவேந்தலை ஏற்பாடு செய்து நடத்தியமை தொடர்பில் தமிழ் அரசு கட்சியின் கரைச்சி பிரதேச சபை உறுப்பினரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனின் சாரதியுமான பாரதிதாசன் எழில் வேந்தன் கைது செய்யப்பட்டுள்ளார்.
கடந்த ஆண்டு மாவீரர் நினைவேந்தலின்போது மாவீரர்களின்

07

## தமிழ் அரசின் மத்திய குழு இன்று கூடுகிறது

யாழ்ப்பாணம், நவ. 05
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயல்குழுவின் விசேட கூட்டம் இன்று புதன்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது.

07

## இளம் குடும்ப பெண் கொலை கணவரும் குழந்தையும் மாயம்!


- குமார. கோகுலன்

வவுனியா, நவ. 05
இளம் குடும்பப் பெண் ஒருவர் குத்திக் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.
இந்தநிலையில், அவருடன் இருந்த கணவரும் அவர்களின் 2 வயது பெண் குழந்தையும் காணாமல் போயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
வவுனியா - பூம்புகார்

07

## போதைப்பொருள் மாபியாக்களை வடக்கிலிருந்து துடைத்தெறிவோம்

### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்



கொழும்பு, நவ. 05
போதைப் பொருளுக்கு முடிவு கட்டுவதற்குரிய சமர் ஆரம்பமாகியுள்ளது. இந்த சமரை கண்டு அஞ்ச வேண்டாம். அதற்கு பேராதரவு தாருங்கள். வடக்கு மண்ணில் இருந்து

07

## 60 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை!

### பொது நிர்வாக அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 05
அரச சேவையில் 60 ஆயிரம் உத்தியோகத்தர்களை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

07

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருட்களை வடக்கில் கடந்த அரசாங்கங்களே பரப்பின!

## ஆளும் தரப்பு எம்.பி.குற்றச்சாட்டு

வவுனியா, நவ. 05

2009ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப் பகுதியில் வந்த அரசாங்கங்கள் திட்டமிட்ட வகையில் வடக்கு மாகாணத்தில் போதைப் பொருளை கொண்டு வந்தன - இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் ஆளும் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினரான ம.ஜெகதீஸ்வரன்.

அத்துடன், நாட்டில் ஆயுத கலாசாரம் மேலோங்கியுள்ளது. இது வடக்கு வரை வியாபித் திருப்பது வேதனைக்குரியது. இவற்றையும் நாம் படிப்படியாகக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்றும் அவர் மேலும் கூறினார்.

வவுனியாவில் தேசிய மக்கள் சக்தியின் பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், போதைப்பொருள் மாபியாக்களோடும் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களோடும் தொடர்பு இருப்பதாலேயே பாதுகாப்பும் ஆயுதமும் கோரும் நிலையில் எதிரணியினர் உள்ளனர்.

போதைப்பொருள் மற்றும் ஒருங்கிணைந்த குற்றச் செயல்களே நாட்டில் தற்போது முக்கிய பேசுபொருளாக உள்ளது. உண்மையிலே இந்த இரண்டும் ஒரு நாட்டுக்கு பெரும் சவால்விடுகின்ற ஒரு விடயம். அதனாலேயே எங்களுடைய அரசாங்கம் இதற்கு எதிராக தீர்க்கமான முடிவை எடுத்துள்ளது.

உண்மையிலேயே இந்த போதைப்பொருள் மாபியாக்கள் கடந்த அரசாங்கங்களாலும் அரசியல்வாதிகளாலும் அரவணைக்கப்பட்டு - அவர்களுடைய வழிநடத்தலிலும் - ஒத்துழைப்பாலுமே எமது நாடு பாரதூரமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

பொறுப்புள்ள அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் போதைப்பொருளை ஒழிக்கும் செயல்பாட்டை முன்னெடுத் திருக்கிறோம். நிச்சயமாக எங்களுடைய காலப்பகுதியில் நாட்டிலிருந்து போதை பொருளை விரைவாக இல்லா தொழிப்போம்.

வடக்கு மாகாணத்தில் 2009ஆம் ஆண்டு யுத்தத்துக்கு முற்பட்ட காலப்பகுதியில் இப்படியான நிலைப்பாடு காணப்படவில்லை. ஆனால், 2009ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் வந்த அரசாங்கங்கள் வடக்கு மாகாணத்தின் எதிர்கால சந்ததியை அழிக்கும் நோக்குடன் - திட்டமிட்ட வகையிலே - போதைப் பொருளை எங்கள் பிரதேசங்களுக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். நாங்கள் - வடக்கு மாகாணத்தை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலே நிச்சயமாக இதற்கு எதிராக முழுமூச்சாக செயல்படுவோம்.

குறிப்பாக ஆயுத கலாசாரம் மேலோங்கி இருக்கிறது. இவற்றையும் நாங்கள் படிப்படியாக கட்டுப்படுத்தி வந்து கொண்டிருக்கிறோம். அது வடக்கு வரை வியாபித் திருப்பது வேதனைக்குரிய விடயமாகும்.

போதைப்பொருளுக்கு எதிரான செயல்பாட்டில் ஜனாதிபதி, ஆளும் கட்சி பிரதிநிதிகள் உட்பட அனைவரும் முழுமையாக நின்று செயல்படுகின்றார்கள். இதன்படி எங்களுக்குதான் பாதுகாப்பு தேவை. ஆனால், எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது - எங்களது பாதுகாப்பு மக்களாவர்.

எதிர்க்கட்சியினர் ஏனோ தங்களுக்கு ஆயுதம் வேண்டும் என்று கூறுகிறார்கள் அல்லது துப்பாக்கி வேண்டும் என்று கூறுகிறார்கள் அல்லது பாதுகாப்பு வேண்டும் என்று கூறுகிறார்கள். இது விநோதமான விடயமாக இருக்கிறது. நான் நினைக்கின்றேன் போதை பொருள் மாபியாக்களோடும் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களோடும் தொடர்பு ஏதும் இருக்கிறதோ தெரியவில்லை - என்றார். (ஐ-10)

# ஐஸ் போதைப்பொருளுடன் யாழ்ப்பாணத்தில் 6 பேர் கைது

### - ஒருவர் வழிப்பறியில் ஈடுபட்டவர் -

யாழ்ப்பாணம், நவ. 05

யாழ்ப்பாணம் நகரில் ஐஸ் போதைப்பொருளுடன் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் வழிப்பறியில் ஈடுபட்டு வந்தவர் என்று பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் 6 பேரும் கைது செய்யப்பட்டனர். இவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் நகரில் இடம்பெற்ற வழிப்பறிகளுடன் தொடர் தொடர்புடையவர் என்பது பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில தங்கச் சங்கிலி ஒன்றும் வழிப்பறிக்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன. (ஐ)

# பெண் சிப்பாயிடம் வழிப்பறி சந்தேகநபர் ஐஸ்டன் கைது

யாழ்ப்பாணம், நவ. 05

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் பேருந்துக்காகக் காத்திருந்த பெண் சிப்பாயின் கைப்பையை திருடிய சந்தேக நபர் ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தக் கைப்பையில் ஒரு பவுண் நகை, பணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் இருந்தன என்றும் இந்த வழிப்பறி தொடர்பில் சிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்தார்.

இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார், தமக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கொடிகாமத்தில் பதுங்கியிருந்த சந்தேகநபரை கைது செய்தது. அந்தச் சமயம் அவரிடம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டது.

கைதான நபரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# ஈழநாடு முகவர் செல்வரத்தினம் காலமானார்!



வடமராட்சி, நவ. 05

நெல்லியடி பத்திரிகை முகவர்களில் ஒருவரான நீக்கிலஸ் ஜோர்ஜ் செல்வரத்தினம் தனது 83ஆவது வயதில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக நெல்லியடியில் பத்திரிகை முகவராக செயல்பட்டு வந்துள்ளார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு நாளை மறு தினம் வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் விக்னேஸ்வரா வீதி, கரவெட்டி தெற்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மாதா கோவிலில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். (ஐ)

# விபத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், நவ. 05

டிப்பர் வாகனத்தை மோட்டார் சைக்கிளில் முந்திச் செல்ல முயன்றபோது ஏற்பட்ட விபத்தில் இளம்குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், கீரிமலை நோக்கிப் பயணித்தபோது, டிப்பர் வாகனத்தை முந்திச் செல்ல முயன்றார். அந்தச் சமயம், எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி, டிப்பருக்குள் அகப்பட்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.


தெல்லிப்பழையை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார். (ஐ)

# அராலியில் வீதியோரமாக ஆபத்தை ஏற்படுத்தும்நிலையில் பனை மரம்

யாழ்ப்பாணம், நவ. 05

அராலி பாலத்துக்க அண்மையாக அம்மன் கோவிலுக்கு செல்லும் வீதியின் ஓரமாக பனைமரம் ஒன்று ஆபத்தானவகையில் காணப் படுகிறது.

அரைகுறையாக வெட்டப் பட்ட நிலையில் கைவிடப்பட் டுள்ள மரம் எப்போது வேண்டுமானாலும் முறிந்து விழக்கூடிய அச்சநிலை காணப்படுவதாக அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர்.



இந்த வீதியால் தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் பயணிக் கின்றனர். எனவே, உரிய தரப்பினர் இது விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-05)

# வவுனியா பொருளாதார நிலையத்தில் கமநல சேவையின் விற்பனை நிலையம்

வவுனியா, நவ. 05

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் கமநல சேவைகள் நிலைய விற்பனை நிலையம் நேற்று செவ்வாய்க் கிழமை மாவட்ட செயலாளர் பி. ஏ. சரத் சந்திரவால் திறந்து வைக்கப்பட்டது.



வவுனியா மாவட்ட மக்களுக்கு விளைபொருட்களை விற்பனை செய்யும் நோக்கில் இந்த விற்பனை நிலையம் குறைந்த விலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த நிலையம் நாட்டிலுள்ள பொருளாதார மத்திய நிலையங்களில் முதன்முறையாக வவுனியா மாவட்டத்திலேயே திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் க. விமலரூபன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலாளர் பி.ஏ.சரத் சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், தேசிய இரசாயன உரச்செயலக பிரதிப்பணிப்பாளர் எஸ். எம். பி. விஜயவர்த்தன, கமநல அபிவிருத்தி திணைக்கள மேலதிக ஆணையாளர் ஏ.எம். விக்ரமாரச்சி, மற்றும் விவசாய சம்மேளன தலைவர், முக்கியஸ்தர்கள், வர்த்தக சங்க தலைவர், கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத் தர்கள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# செல்வம் எம். பியின் வாகனத்தில் தீ பரவல்

வவுனியா, நவ. 05

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் வாகனம் திடீரென தீப்பற்றியது. எனினும், அந்தத் தீ உடனடியாகவே கட்டுப் பாட்டுக்குக் கொண்டுவரப் பட்டது.

இந்தச் சம்பவம் வவுனியா - புளியங்குளம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பயணித்துக் கொண்டிருந்த போதே வாகனம் தீப்பற்றியது. மின்சார சீரின்மை காரணமாக இந்தத் தீ பரவல் ஏற்பட் டுள்ளது. வாகன சாரதியும் அப்பகுதியில் நின்றவர்களும் தீயை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அந்தச் சமயம் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் பயணிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
05.11.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 19

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# தென்னிலங்கையுடன் உரையாடுதல்

இலங்கை தமிழ் அரசு கட்சியின் அழைப்பில் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் இளம் அரசியல்வாதிகள் குழுவொன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தது. அண்மையில், இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இலங்கையின் இளம் அரசியல்வாதிகள் புதுடில்லியில் கருத்தரங்கு ஒன்றில் பங்கு கொண்டிருந்தனர். அதில், இலங்கை தமிழ் அரசு கட்சியால் பரிந்துரைக்கப்பட்டவர்களும் பங்குகொண்டிருந்தனர். ஒரு வகையில் குறிப்பிட்ட இளம் அரசியல்வாதிகளின் யாழ்ப்பாணம் வருகை மேற்குறிப்பிட்ட புதுடில்லி கருத்தரங்கின் தொடர்ச்சியாகவும் இருக்கலாம்.

இவ்வாறான உரையாடல்கள் வரவேற்கப்பட வேண்டும். ஈழத் தமிழர் அரசியல் மிதவாதத்திலிருந்து ஆயுதப் போராட்டமாக பரிணமித்த காலத்தில் இவ்வாறான உரையாடல்கள் தமிழ்ச் சூழலில் இடம்பெற்றிருக்கின்றன. அதாவது, தென்னிலங்கையிலுள்ள முற்போக்கு தரப்புகளுடன் உரையாட வேண்டும், தமிழ் மக்களின் பிரச்னைகளை சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்னும் கோரிக்கைகள் இருந்தன.

குறிப்பாக, தமிழ்ச் சூழலில் இடதுசாரி பின்புலத்திலிருந்து அரசியலை நோக்கியவர்கள் பலர் இவ்வாறான வாதங்களை முன்வைத்திருக்கின்றனர். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஒரு காலத்தில் தற்போது ஆட்சியிலிருக்கும் ஜே. வி. பி.யினருக்கு பயிற்சிகள் வழங்கியதாகவும் தகவல்கள் உண்டு. தென்னிலங்கையின் புரட்சிகர சக்திகளை அரவணைக்க வேண்டும் என்னும் அடிப்படையிலேயே இவ்வாறான நகர்வுகள் அன்றைய காலத்தில் சிந்திக்கப்பட்டன.

ஆனால், தேர்தல் அரசியலுக்கு முன்னால் அனைத்து முற்போக்கு வாதங்களும் தோல்வியடைந்திருப்பதே வரலாறு. முற்போக்கான எண்ணம் கொண்ட சிங்கள சிந்தனையாளர்கள் - சமூக செயல்பாட்டாளர்கள் என்போர்கூட தேர்தல் அரசியல் என்று வருகின்றபோது தென்னிலங்கையின் சிங்கள மேலாதிக்க சிந்தனையை உள்வாங்கிக் கொள்பவர்களாகவே இருந்திருக்கின்றனர். தேர்தல் அரசியலில் செல்வாக்கற்ற ஒரு சிலரே இப்போதும் தமிழ் மக்களுக்கு ஆதரவாகப் பேசுவதைக் காணலாம். இது தென்னிலங்கையின் அரசியல் மனோநிலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு. இதற்கு ஏராளமான உதாரணங்கள் உண்டு. இலங்கையின் தேர்தல் சீவிய அரசியலுக்கு முன்னால் இடதுசாரி, வலதுசாரி அனைத்துமே ஒன்றுதான்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் இலங்கை தமிழ் அரசு கட்சியின் இவ்வாறான முயற்சிகளின் பெறுமதி சந்தேகத்துக்கு உரியதாகவே இருக்கிறது. இதேவேளை மறுபுறம் நோக்கினால் அதே தேர்தல் சீவிய அரசியலில் மூழ்கிப் போகவேண்டிய நிர்ப்பந்தத்திலேயே தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளும் இருக்கின்றன. கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது ஜே. வி. பிக்கு வாக்களிக்க வேண்டாம் என்னும் அடிப்படையிலேயே தமிழ் கட்சிகளின் பிரசாரங்கள் இருந்தன. ஆனால், மறுபுறம் ஜே. வி. பி., தமிழ் மக்களுக்கு விரோதமாக எந்தவொரு விடயத்தையும் தேர்தலில் முன்வைத்திருக்கவில்லை.

இந்த அடிப்படையில் நோக்கினால் கடந்த பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களின்போது சிங்கள கட்சிகளை விடவும் தமிழ் கட்சிகளே அதிகம் இனவாதத்தைக் கையிலெடுத்திருந்தன. ஜே. வி. பி. தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுவிட்டால் தங்களின் அரசியல் இருப்புக்கு ஆபத்து என்று தமிழ் கட்சிகள் அச்சமடைகின்றன. இதன் காரணமாகவே வெளிப்படையாகவே ஜே. வி. பி.க்கு வாக்களிக்க வேண்டாம் என்னும் பிரசாரத்தை முன்னெடுத்தன.

இவ்வாறான தேர்தல் சீவிய அரசியல் மனோநிலை இரண்டு பக்கத்திலும் ஆதிக்கம் செலுத்தும் வரையில், இனவாதம் கடந்த அரசியல் உரையாடல்கள் பலனளிக்கும் அரசியல் செயல்பாடாக இருக்கப் போவதில்லை. இங்கு இனவாதம் என்பதை மேலாதிக்கம் என்னும் அடிப்படையில் மட்டும் புரிந்து கொள்ள வேண்டியதில்லை. மாறாக, பரஸ்பர அச்சம் என்னும் அடிப்படையிலும் புரிந்து கொள்ளலாம். பரஸ்பர அச்சமே சிங்கள மற்றும் தமிழ் வெறுப்புவாத தேசிய வாதத்தின் மூலதனமாக இருக்கிறது. ஆனால், இரு வகை கடும்போக்கு தேசியவாதங்களும் இலங்கைத் தீவில் தோல்வியடைந்திருக்கின்றன என்பதே உண்மை. இந்த உண்மையை உணர்ந்து ஒரு புதிய தலைமுறை வெளியில் வராமல் மாற்றங்கள் நிகழப் போவதில்லை.

## வட மாகாண மர நடுகை மாதம் கார்த்திகை - 2025



"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்."
- மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

# போதைப்பொருள் கட்டுப்பாட்டில் அரசாங்கம் இரட்டை நிலைப்பாடு

### ஓமல்பே சோபித தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 05

நாடுபூராகவும் பரவியுள்ள போதைப்பொருள் அச்சுறுத்தலை கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி முக்கியமான வேலைத் திட்டத்தை எடுத்தள்ள நிலையில், அரசாங்கம் கஞ்சா வளர்ப்பதற்கு ஆறு நிறுவனங்களுக்கு 66 ஏக்கர் வழங்கியுள்ளதன் மூலம் போதைப்பொருள் கட்டுப்படுத்தும் வேலைத் திட்டத்தில் இரட்டை நிலைப்பாடு இருந்து வருகிறது என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்-

நாட்டில் எந்த தலைவரும் மேற்கொள்ளாத போதைப் பொருள் அச்சுறுத்தலை ஒழிக்கும் நடவடிக்கையை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னெடுத்துள்ளார். போதைப் பொருளை முற்றாக ஒழிப்பாக சுகாதாச விளையாட்டரங்கில் அவர் சத்தியமிட்டார்.

உண்மையில அந்த தீர்மானம் மிகவும் முக்கியமாகும். நாட்டின் முன்னேற்றம், எதிர்கால சந்ததியினரின் எதிர்காலம் மற்றும் நாட்டின் அபிவிருத்தியை எதிர்பார்க்கும் அனைவரும் அதனை வரவேற்கவேண்டும்.

இது இவ்வாறு இருக்க, ஏற்றுமதிக்காக என தெரிவித்து, ஆறு நிறுவனங்களுக்கு கஞ்சா வளர்ப்பதற்கு 66 ஏக்கர் காணி வழங்கி இருக்கிறது. இது குழுவிக் கழுவி சேற்றில் போடும் வேலையாகும். கஞ்சா வளர்ப்பதற்கு அனுமதிப்பது முற்றாக அரசியலமைப்புக்கு முரணான செயலாகும்.

இது தூங்கிக்கொண்டிருக்கும் எதிர்க்கட்சியை எழுப்பிவிடும் யோசனையாகும். அதனால், ஏற்றுமதிக்காக கஞ்சா வளர்ப்பதற்கு இடமளிக்கும் வேலைத்திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு மகா நாயக்க தேரர்கள், சிவில் அமைப்பினராக நாங்கள் அரசாங்கத்துக்கு சொல்கிறோம்.

பாதால உலகம், போதைப் பொருள் ஒழிப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லுங்கள். திருட்டுக்கு, ஊழல் மோசடிக்கு எதிராக மக்கள் வீதிக்கிறங்கி, அதற்கு ஆதரவளித்த ஆட்சியாளர் களை வீட்டுக்கு அனுப்பிய மக்கள் இருக்கும் நாடு இது. அதனால் நாட்டுக்கு பொருத்தமில்லாத தீர்மானம் எடுப்பது, அரசாங்கத்தின் இருப்புக்கும் தடையாக அமையக்கூடும்- என்றார். (அ)

# 314 இந்திய கடற்றொழிலாளர்கள் நடப்பு ஆண்டில் இதுவரை கைது!

கொழும்பு, நவ. 05

நடப்பாண்டின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 300க்கும் மேற்பட்ட இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்தது.

கடற்படை ஊடகப் பேச்சாளர் இந்திக டி சில்வா இதனை தெரிவித்தார்.


அதன்படி, இலங்கை கடல் எல்லையைத் தாண்டி கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 314 இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், அவர்கள் பயணித்த 40 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

முன்னதாக நேற்று முன்தினம் அதிகாலை மாத்திரம் 4 படகுகளில் வருகை தந்த 35 இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், இலங்கை கடற்றொழிலாளர்களை பாதுகாக்கும் முகமாக, எல்லை தாண்டிய கடற்றொழிலில் ஈடுபடும் எந்தவொரு இந்திய கடற்றொழிலாளரும் பாரபட்சமின்றி கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் கூறினார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**



ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் லாபம் குறையும். எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகும்.

**இடபம்**



விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். அலைச்சலுடன் ஆதாயம் தரும்.

**மிதுனம்**



எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்**



உணர்ச்சி வசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் செயல்படுவீர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**சிம்மம்**



குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கன்னி**



சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். உறவினர் முன்கோபத்தால் பகை உண்டாகும். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**துலாம்**



மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழி உறவினர்கள் மதிப்பார்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். நன்மைகள் உண்டாகும்.

**விருச்சிகம்**



குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அலுவலகத்தில் சக ஊழியர்களை விட அதிகாரிகளிடம் செல்வாக்கு கூடும்.

**தனுசு**



குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**மகரம்**



எதிர்ப்புகள் அடங்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**



குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். தாயாரின் உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**மீனம்**



கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

# குற்ற செயல்களை கட்டுப்படுத்த பொலிஸார் துரித நடவடிக்கை

## பொலிஸ் அத்தியட்சகர் அரச அதிபரிடம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 05

போதைப்பொருள் பாவனை உள்ளிட்ட குற்றச் செயல்களை கட்டுப்படுத்த பொலிஸார் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் அத்தியட்சகர் பாலித செனவிரத்ன, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் யாழ். நகர் பாதுகாப்பு மற்றும் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், சட்டவிரோத மண் கடத்தல், திருட்டு மற்றும் போதைப் பொருள் பாவனை என்பனவற்றுக்கு எதிராக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை அரசாங்க அதிபருக்குத் தெரியப்படுத்தியதுடன், 11 இடங்களில் போக்குவரத்து கண்காணிப்பு பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் எனவும் இதில் யாழ். நகரப்பகுதியில் வேம்படிச் சந்தி, சிறீ நாக விகாரைச் சந்தி, மின்சார நிலைய வீதிச் சந்தி மற்றும் காங்கேசன்துறை வீதிச் சந்தி என்பவற்றில் நிரந்தர கண்காணிப்பில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் தலைமை பொலிஸ் அத்தியட்சகரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும், பொதுமக்களுக்கான 24 மணித்தியாலம் "அவசர பொலிஸ் பிரிவு" நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதாகவும் 021, 222, 2221 என்ற புதிய அவசர தொலைபேசி இலக்கத்துக்கு பொதுமக்கள் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தலைமை பொலிஸ் அத்தியட்சகரால் அரசாங்க அதிபருக்கு தெரிவிக்கப் பட்டது. (எ)

# அநுராகம் கவின் கலை நிலைய மாணவர்களின் ஆற்றுகை விழா

யாழ்ப்பாணம், நவ. 05

திருநெல்வேலி, அநுராகம் கவின் கலை நிலையம் நடத்தும் மாணவர்களின் ஆற்றுகை விழா யாழ். இந்துக்கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 03. 00 மணிக்கு இந்துக்கல்லூரி உதவி அதிபர் சிவநாதன் பரணீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி சிவசுப்பிரமணியம் ரகுராமும் திருமதி யாழினி ரகுராமும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்வர்.

இணுவில் தர்ம சாஸ்தா வீணை இசைக் கலைஞர் சிவசிறீ. மஹாதேவ சோமசுந்தரக்குருக்கள் சிறப்பு விருந்தினராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி சிவசிறீ பத்மநாபக் குருக்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். அநுராகம் மாணவர்களின் வாய்ப்பாட்டு இசை, வீணை குழு இசை, வயலின் குழு இசை நிகழ்வுகளைத் தொடர்ந்து மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

# தேசிய சுனாமி ஒத்திகை நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 05

சுமாத்திரா தீவை அண்மித்த கடல் பகுதிகளில் பல சிறிய நிலநடுக்கங்கள் தொடர்ச்சியாக பதிவாகி வருவதனால் இலங்கையும் சுனாமிக்கு தயாரான நாடு என்ற வகையில் யாழ்ப்பாணம், களுத்துறை, மாத்தறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய நான்கு மாவட்டங்களை பிரதானமாகக் கொண்டு நாட்டின் பிற மாவட்டங்களையும் உள்ளடக்கி தேசிய சுனாமி ஒத்திகை நிகழ்வு, இந்தியப் பெருங்கடல் பிராந்திய சுனாமி எச்சரிக்கை மையத்தின் கீழ் உள்ள 28 நாடுகளை உள்ளடக்கிய பிராந்திய அமைப்பால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் ஒருபகுதியாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவில் உள்ள பருத்தித்துறை கிராம உத்தியோகத்தர் பிரிவான ஜே- 401 இன்று 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 09.00 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தால் தேசிய ரீதியாக சுனாமி ஒத்திகை நிகழ்வு நடைபெறவுள்ளது.

இது ஒரு ஒத்திகைச் செயல்பாடு என்பதனால் இது தொடர்பில் பொதுமக்கள் எவரும் குழப்பமடையத் தேவையில்லை என யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார். (எ-05)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ. 05

அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 30 நாளை மறுதினம் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் இளஞ்சைவப்புலவர் ச. நவநீதன் "சோழணை மடுவில் வீட்டிய படலம்" எனும் தலைப்பில் நிகழ்த்தும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# ஹெரோயினுடன் பெண் கைது!

யாழ்ப்பாணம், நவ. 05

கொக்குவில், குளப்பிட்டி பகுதியில் 2 கிராம் 500 மில்லிக் கிராம் ஹெரோயினுடன் நீண்டகாலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 31 வயதுடைய பெண்ணொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் போதைப்பொருள் தடுப்பு பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர், சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியர்கள் பற்றாக்குறையால் வைத்தியசாலைகளில் நெருக்கடி!

## சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 05

**நாட்டில் நிலவும் வைத்தியர்களுக்கான கடும் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலைகளில் பாரிய நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் நோயாளர்களுக்கு தரமான சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு இருக்கும் உரிமை இல்லாமல்போயுள்ளதாகவும் சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

இந்தப் பிரச்னைக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது சுகாதார அமைச்சர் உள்ளிட்ட சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளின் முழுப் பொறுப்பாகுமென்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்தார்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனை அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதாரம் என்பது மிகவும் உணர்திறன் கொண்ட விடயமாகும். அதற்கிடையில், நாட்டுக்குள் சுகாதார நிலைமைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்காக வைத்தியர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர் குழாம்களுக்கிடையில் பெரும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. அனுமதி பெற்ற வைத்தியர்களின் எண்ணிக்கை மற்றும் ஏனைய அனுமதி பெற்ற பணிக்குழாம்களில் இருக்கும் குறைபாடுகளால் இந்த நிலைமை தோற்றம் பெற்றுள்ளது.

இதனுடன் இணைந்த வகையில் மக்களுக்கு அல்லது நோயாளர்களுக்கு வழங்கவேண்டிய சிகிச்சைகளை முறையாகவும் முழுமையாகவும் அனுமதி பெற்ற தரத்தின் அடிப்படையில் சேவையை எவ்வாறு பெற்றுக் கொடுப்பது என்பதற்காகவே அனுமதி பெற்ற பணிக்குழாம் உருவாக்க எதிர்பார்க்கிறோம்.

ஆனால், தற்போதுள்ள நிலைமையில் எவ்வளவு அர்ப்பணிப்புடன் செயற்பட்டாலும் சரி, வைத்தியர்கள் எவ்வளவு நேரம் பணியாற்றினாலும் சரி, நோயாளர்கள் முற்கூட்டியே வந்து சிகிச்சைக்காகக் காத்திருந்தாலும் அனுமதி பெற்ற நடைமுறைகளுக்கமைய செயலாற்றுவதில் கடும் அளெகரியம் இருக்கிறது. ஒருசில சிகிச்சைகளின்போது சத்திர சிகிச்சைகளுக்கு தினத்தைக் குறித்துக்கொடுக்கும்போது அந்த சத்திர சிகிச்சைக்கான தினம் வருடக்கணக்காகப் பின்னடைவைச் சந்திக்கிறது. ஒரு சில சிகிச்சைகளுக்கான சுகாதார ஆய்வகப் பணிகள் பல வருடங்களுக்கு காலம் ஒத்திவைக்கப்படுகின்றன.

ஒரு சில வைத்தியர்களை சந்திப்பதற்கான தினத்தை ஒதுக்கிக்கொள்ளும்போது அதற்கு சில மாதங்கள் தேவைப்படுகின்றன. இந்தப் பிரச்னைக்கு தீர்வு கண்டு, சுகாதாரத்துறையின் நிலைமையை மேலும் மேம்படுத்த வேண்டும்.

சுகாதார அமைச்சுக்குள் இருக்கும் வைத்தியர்களின் கடும் தட்டுப்பாடு, வைத்தியசாலைகளில் இருக்கும் கடும் நெருக்கடி, நோயாளர்களுக்கு தரமான சேவையைப் பெற்றுக்கொள்ள இருக்கும் உரிமை இல்லாமல் போவதற்கு பிரதான காரணமாக இருப்பது வைத்தியர்களின் தட்டுப்பாடேயாகும்.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட நாட்டின் மேலும் ஒருசில நிலைமைகளால் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறினார்கள். அதேபோல், கஷ்டப்பட்டாவது பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கும் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த வைத்தியர்களே மீதப்பட்டார்கள். அவர்களே முடிந்தளவு தமது பலம், அனுபவத்தைப் பயன்படுத்தி அவர்களால் முடிந்தளவு நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பை முன்னெடுத்துச் செல்கிறார்கள். சுகாதாரத்துறைக்கு கிடைக்கவேண்டிய கௌரவம் உலக சுகாதார ஸ்தாபனம் போன்ற நிறுவனங்களிடமிருந்து கிடைக்கின்றன.

ஆனால், இதற்கிடையில் 2015 ஆம் ஆண்டு இருந்த அனுமதி பெற்ற பணிக்குழாம் அல்லது 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு அல்லது அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 7-10 வருடங்கள் வரையான காலப்பகுதியில் வைத்தியர்களின் எண்ணிக்கை புதுப்பிக்கப்படவில்லை. வைத்தியசாலைகளின் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கும் புதிய பிரிவுகளை நிர்மாணிக்கவும் அவற்றை விஸ்தரிப்பதிலும் எமது அரசியல் அதிகாரிகள் மிகவும் திறமையுடன் செயற்படுகின்றனர். இதனூடாக மாத்திரம் சுகாதாரத் துறையை கட்டியெழுப்ப முடியாது-என்றார்.

(அ)

# கஞ்சா செய்கையில் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கும் வாய்ப்பு!

கொழும்பு, நவ. 05

இலங்கையில் மருத்துவ மற்றும் ஏற்றுமதி நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படும் கஞ்சாப் பயிர்ச்செய்கைத் திட்டத்தின் அடுத்த கட்டத்தில், உள்ளூர் முதலீட்டாளர்களுக்கும் பங்கேற்க வாய்ப்பு வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில், முதலீட்டுச் சபையினால் விதிக்கப்பட்ட கண்டிப்பான நிபந்தனைகளின் கீழ் வெளிநாட்டு நிறுவனங்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மொத்தம் ஏழு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இத்திட்டத்துக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்கள் இந்த ஆண்டின் பிற்பகுதியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு, அடுத்த ஆண்டு முதல் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனுமதி வழங்கப்பட்ட நிறுவனங்கள், கஞ்சாவின் இலைகள், பூக்கள் மற்றும் பிற தாவரப் பாகங்களை ஏற்றுமதி செய்ய அரசாங்க அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

இந்தத் திட்டத்தை அடுத்த கட்டத்தில் உள்ளூர் முதலீட்டாளர்களின் பங்கேற்புடன் நடைமுறைப்படுத்துவதன் மூலம் அது மேலும் வெற்றியடையும்-என்றார்.

(அ)

# நுகேகொடை பேரணியில் பங்கேற்க மறுப்போருக்கு ஆளும் தரப்புடன் டீல்!

கொழும்பு, நவ. 05

நுகேகொடை பேரணியில் பங்கேற்க மறுக்கும் தரப்பினருக்கு ஆளுங்கட்சியுடன் "டீல்" இருக்கக்கூடும் என்று பொதுஜன பெரமுன கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

பொதுஜன பெரமுன கட்சியின் ஊடக சந்திப்பு அக்கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது அரசாங்கத்துக்கு எதிராக எதிர்வரும் 21 ஆம் திகதி நுகேகொடையில் முன்னெடுக்கப்படவுள்ள பேரணியில் பங்கேற்பதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சர்வஜன அதிகாரம் என்பன விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் கேள்வி எழுப்பட்டது.

இதற்கு பதிலளிக்கையிலேயே மேற்படி குற்றச்சாட்டை பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நுகேகொடை கூட்டமென்பது கட்சிகளின் கொள்கையுடன் தொடர்புபட்டது அல்ல. ஐக்கிய தேசியக் கட்சிக்கும், எமது கட்சிக்கும் இடையில் கொள்கை வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனினும், இது பொது வேலைத்திட்டமென்பதால் அக்கட்சி பங்கேற்கின்றது.

அரசாங்கத்தின் ஒடுக்குமுறையை எதிர்த்து ஜனநாயகத்துக்காகவும், நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியுமே பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் எதிர்க்கட்சிகளால் பங்கேற்காமல் இருக்க முடியாது. குறைந்தபட்சம் பேரணியை ஆதரித்தாவது அறிவிப்பு வெளியிட வேண்டும்.

அவ்வாறு செய்ய மறுக்கும் எதிரணி தரப்புக்கு அரசாங்கத்துடன் " டீல்" இருக்கக்கூடும் அல்லது வர்த்தக கொடுக்கல் - வாங்கல் இருக்கக்கூடும்."-என்றார்.

(அ)

# இரண்டரை இலட்சம் வாகனங்கள் கடந்த 10 மாதங்களில் இறக்குமதி!

## 63,000 கோடி ரூபா வரி வருமானம்

கொழும்பு, நவ. 05

நடப்பாண்டின் முதல் 10 மாதங்களில் 2,50,000 வரையான வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அதனூடாக 63,000 கோடி ரூபா வரி வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் 09 மாதங்களில் மாத்திரம் வாகன இறக்குமதிக்காக 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் (36,431 கோடி அமெரிக்க டொலர்) நிதி செலவு செய்யப்பட்டுள்ளதுடன், வாகன இறக்குமதிக்காக அதிக நிதி கடந்த செப்ரெம்பர் மாதமே செலவிடப்பட்டுள்ளதாக புதிய தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

வாகன இறக்குமதிக்காக கடந்த செப்ரெம்பர் மாதத்திலேயே அதிக நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் கடந்த செப்ரெம்பர் மாதம் வாகன இறக்குமதிக்காக 286 மில்லியன் அமெரிக்க டொலர் (8,682 கோடி ரூபா) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாகன இறக்குமதிச் செலவில் தனியார் வாகனங்கள் மற்றும் வர்த்தக பயன்பாட்டுக்கான வாகனங்களின் இறக்குமதிக்குச் சென்ற செலவும் உள்ளடங்குவதாக தரவு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கயின் தரவு அறிக்கைகளுக்கமைய ஏப்ரல் மாதத்தில் வாகன இறக்குமதிக்காக 134 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளதுடன், மே மாதத்தில் 118 மில்லியின் ரூபா வாகன இறக்குமதிக்காக செலவிடப்பட்டுள்ளது. அதேபோன்று, ஜூன் மாதத்தில் இலங்கைக்கான வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக 163 மில்லியன் டொலரும் ஜூலை மாதத்துக்கான வாகன இறக்குமதிக்காக 193 மில்லியன் டொலர் நிதியும் செலவு செய்யப்பட்டுள்ளது.

(அ)

# இந்திய தொழில்துறை கூட்டமைப்பை கொழும்புக்கு வருமாறு சஜித் அழைப்பு!

புதுடில்லி, நவ. 05

இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, புதுடில்லியில் இந்திய தொழில்துறை கூட்டமைப்பினரை சந்தித்து முக்கிய பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், வர்த்தகம் மற்றும் முதலீட்டு தொடர்புகளை விரிவுபடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

1895 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்தியத் தொழிற்துறை கூட்டமைப்பானது இந்தியாவின் முன்னணி வர்த்தக சங்கமாகும்.




இலங்கையில் தனியார்துறையால் இயக்கப்படும், புதுமைகளை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி மாதிரியை மேம்படுத்துவதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம் என்றும், இலங்கையின் மறுசீரமைப்புக்குப் பிந்தைய மீட்சியில் பெரும் பங்கை ஆற்றுவதற்கு இந்திய தொழில் துறைக்கு அழைப்பு விடுக்கிறோம் என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

விவசாய பதப்படுத்தல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வழங்கல் சேவைகள், டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தி போன்ற துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்புக்கு கூடிய வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் இங்கு தெரிவித்தார்.

முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காணவும், இலங்கை ஏற்றுமதி சபைக்கும் , இந்திய தொழிற்துறை வலையமைப்புகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், இலங்கை-இந்திய தொழில்துறை கூட்டமைப் வர்த்தக மன்றம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது யோசனை முன்வைத்தார்.

வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப கூட்டாண்மைகள் தொடர்பில் ஆராயும் பொருட்டு வணிக முயற்சி பிரதிநிதிகள் குழவினரை கொழும்புக்கு விஜயம் செய்யுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அழைப்பு விடுத்தார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மக்கள் நலன்சார்ந்த விடயங்களுக்கு அதிகளவு நிதி ஒதுக்கீடு வேண்டும்"

மட்டக்களப்பு, நவ. 05

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் பெற்றோலியப் பொருட்கள் உட்பட பொருட்களுக்கான விலைகள் குறைக்கப்பட்டு மக்கள் நலன்சார்ந்த விடயங்களுக்கு அதிகளவான நிதியை ஒதுக்கீடுசெய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

களுவாஞ்சிக்குடியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"அரசாங்கம் போதைப்பொருளுக்கு எதிராக முன்னெடுக்கும் நடவடிக்கைகளை வரவேற்பதுடன் வடக்கு - கிழக்கில் இடம்பெறும் கசிப்பு விற்பனையையும் கட்டுப்படுத்த நடவடிக்கையெடுக்க வேண்டும்.

விலைவாசிகளை குறைக்காமல், அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்காமல் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து ஒரு வருடமாகிவிட்டது. ஓர் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து முதலாவது வருடத்தில் செய்யாத விடயத்தை அதன் பின்னர் வரும் காலங்களில் செய்வது சாத்தியமற்றதாகவேயிருந்து வருகின்றது.

வரவிருக்கின்ற வரவு - செலவுத் திட்டம் ஊடாக அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

இலங்கையில் யார் அமைச்சர்களாக இருக்கின்றார்கள் என்பது எங்களுக்கே தெரியாத நிலையில் அவர்களுக்கான அச்சுறுத்தல் என்பது இருப்பதற்கான வாய்ப்பில்லை. யார் அமைச்சர்களாக உள்ளார்கள் என்பதை அவர்கள் எழுதி ஒட்டிக்கொண்டே இனிவரும் காலங்களில் வரவேண்டும். யார் அமைச்சர்கள் என்று தெரியாத நிலையே உள்ளது"- என்றார். (எ)

# அதிவேகமாக பயணித்த ஓட்டோவின் முன் சில் திடீரென கழன்று விழுந்தது

## இருவர் காயம்: மருத்துவமனையில் அனுமதி

தலவாக்கலை, நவ. 05

தலவாக்கலை நகரத்திலிருந்து தலவாக்கலை தோட்டப்பகுதியை நோக்கி அதிவேகமாக பயணித்த ஓட்டோ ஒன்றின் முன் சில் திடீரென கழன்று விழுந்ததில், ஓட்டோ கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.


இந்த விபத்தில் இருவர் காயமடைந்ததாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்கள் தற்போது லிந்துலை பிரதேச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த விபத்து ஹற்றன்- நுவரெலியா பிரதான வீதியில் தலவாக்கலை பகுதியில் உள்ள புத்த சிலைக்கு அருகில், நேற்று முன்தினம் மாலை 05. 30 மணியளவில் இடம்பெற்றது.

அதிவேகமாக பயணித்த ஓட்டோவின் முன் சில்லில் ஏற்பட்ட கோளாறே விபத்துக்குக் காரணம் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)





அம்பாறை மாவட்டம், காரைதீவு பிரதேசத்தின் கலாசார விழா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

# திருகோணமலையில் இடியுடன் கூடிய மழை

திருகோணமலை, நவ. 05

சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் வடக்கு மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதேநேரம் நாட்டின் ஏனைய பகுதிகளில் சீரான வானிலை நிலவும் எனவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும், அம்பாறை மாவட்டத்திலும் சில இடங்களில் காலை வேளையில் மூடுபனி நிலவக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடும்.

எனவே, அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆபத்துகளைக் குறைப்பதற்குத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (எ)

# திருமலை- சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்தில் சிரமதானம்

திருகோணமலை, நவ. 05

திருகோணமலை, மூதூர் கிழக்கு சம்பூர் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு இந்த சிரமதானத்தை ஏற்பாடு செய்திருந்தது.

சிரமதான நிகழ்வில் முன்னாள் போராளிகள், போராளிகளின் குடும்பத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது சிரமதானத்தில் கலந்து கொண்டோருக்கு கூழ் காய்ச்சி பரிமாறப்பட்டிருந்தது.

மாவீரர் நாள் வாரத்தை முன்னிட்டு மூதூர் கிழக்கு சம்பூர் -ஆலங்குளம் துயிலுமில்லத்தில் தொடர்ந்தும் சிரமதானம் மேற்கொள்ளப்படவுள்ளமையால் இதில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் கலந்து கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

# மட்டு.போதனா மருத்துவமனைக்கு சீன தூதரகத்தால் 240 கதிரைகள்




மட்டக்களப்பு, நவ. 05

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் கோரிக்கையின் பேரில் சீனத் தூதரகத்திடமிருந்து மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பால் பெற்றுக் கொள்ளப்பட்ட 240 கதிரைகள் மட்டக்க ளப்பு போதனா மருத்துவமனையின் நிர்வாகத்தினரிடம் நேற்று முன் தினம் கையளிக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் தலைவர் சி. மாமாங்கராஜா தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் பணிப்பா ளர் திருமதி க. கலாரஞ்சினி, மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக அமைப்பின் செயல்குழு உறுப்பினர்கள், மருத்துவமனை நிர்வாகத்தினர் உள்ளிட்ட பல ரும் இதன்போது கலந்து கொண் டனர். (எ)

# 2028 இல் அரிசி இறக்குமதி முழுமையாக நிறுத்தப்படும்

## அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ. 05

2028 ஆம் ஆண்டு வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி முழுமையாக நிறுத்தப்படும் என அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

மட்டக்களப்பு, போரதீவுப் பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட நவகிரி ஆற்றை குறுக்கிட்டு அமைக்கப்பட்ட அணைக்கட்டு மற்றும் அணைக்கட்டுடனான பாலத்துடன் கூடிய அணைக்கட்டு என்பனவற்றின் திறப்பு விழா கடந்த 2ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"2028 ஆம் ஆண்டு நமது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வெளிநாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யும் நிலையை முற்றிலுமாக நீக்க திட்டமிட்டுள்ளோம். இறக்குமதியால் அதிகளவான பணத்தை செலவிடுகின்றோம். இந்த நிலைமையை மாற்றி எமது பகுதியில் உற்பத்திகளை அதிகரித்து இறக்குமதியை தடுப்பதற்கான வேலைத்திட்டங்களை நாங்கள் முன்னெடுத்துள்ளோம்.

விவசாயத்துறையின் வழிகாட்டுதலுடன், நாட்டுக்குத் தேவையானவற்றைப் பயிரிடவும் தேவைக்கேற்ப அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றவும் கடுமையாக உழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நாங்கள் மிகவும் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ விரும்புகிறோம். அரசாங்கத்தின் பொறுப்பு அதனை நிறைவேற்றுவதுதான், வேறு எதுவும் இல்லை.

நான் ஓர் இலங்கையன், இலங்கையில் முதல் முறையாக திருட்டு, மோசடி, ஊழல் மற்றும் வீண் விரயம் ஒழிக்கப்பட்ட ஓர் அரசியலை நாங்கள் கட்டியெழுப்பியுள்ளோம். இந்த செயல்பாடுகளை நாங்கள் நிறுத்தப்போவதில்லை. இந்த நாட்டை தூய்மையான நாடாக மாற்றும் வரையில் எமது செயல்பாடுகள் தொடரும். இந்த நாட்டிலிருந்து போதைப்பொருளும் ஊழல் மோசடிகளும் துடைத்தெறியப்படும்.

நிலையான வளர்ச்சி என்பது நமது ஆறுகளை காப்பாற்ற வேண்டும், கால்வாய்களை காப்பாற்ற வேண்டும், ஏரிகளை காப்பாற்ற வேண்டும், மணலை காப்பாற்ற வேண்டும் என்பதாகும். அதனை நல்ல நிர்வாகத்துடன் செய்ய வேண்டும். இப்போது நாம் அதற்குத் தேவையான அரசியல் கலாசாரத்தை உருவாக்கியுள்ளோம்"- என்றார். (எ)

# புனித மரியாள் கல்லூரியில் மாணவர் பாராளுமன்றம்

திருகோணமலை, நவ. 05

திருகோணமலை புனித மரியாள் கல்லூரியின் மாணவர் பாராளுமன்றம் கல்லூரி அதிபர் நிரோஷா தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பாடசாலையின் திரேசியன் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக திருகோணமலை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பார்த்தீபனும் கௌரவ விருந்தினராக மாவட்ட உதவித் தேர்தல் ஆணையர் டி. நிரஞ்சனும் கலந்து சிறப்பித்தனர். (எ-12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளஞ்செழியனுக்கு...

ஏற்பட்டிருக்காது என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தனக்கான சேவை நீடிப்பு குறித்து ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு 4 சந்தர்ப்பங்களில் கடிதம் அனுப்பினார் என்றும் அவற்றில் ஒன்றுக்கேனும் பதில் கிடைக்கவில்லை எனவும் முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் கவலை வெளியிட்டிருந்தார். நேற்றைய தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். இவற்றுக்கு பதிலளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி இளஞ்செழியன், அவரின் சேவைகள் தொடர்பில் சமூகத்தில் மதிப்பும் கௌரவமும் காணப்படுகிறது. இவரைப் போன்று பல அரச அதிகாரிகள் காணப்படுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் நீதிமன்ற கட்டமைப்புக்குள் சேவை நீடிப்புகள் வழங்கப்படும் போது பல விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் நீதிமன்ற கட்டமைப்புக்குள் அடுத்தடுத்த நிலைகளுக்கு பதவியுயர்வு பெற வேண்டியவர்களுக்கு சிக்கல்கள் ஏற்படக்கூடும். அவ்வாறான காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அவருக்கு சேவை நீடிப்பு வழங்கப்படாமல் இருந்திருக்கலாம். மாறாக, திட்டமிட்டு அவருக்கான சேவை நீடிப்பு வழங்கப்படாமல் இருக்கவில்லை. இது வழமையான நடைமுறையாகும்.

சில துறைகளில் சேவை நீடிப்புகள் வழங்கப்பட்டிருக்குமாயின், அங்கு பதவி வெற்றிடங்களுக்கான நியமனங்களுக்கு பொருத்தமானவர்கள் இல்லாமல் இருந்திருக்கலாம். எனவேதான் அங்கு ஓய்வு பெறவிருந்த அதிகாரிகளுக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டிருக்கும் - என்றார். (ஐ)

## இந்திய...

புதுடில்லியிலுள்ள நிதி அமைச்சில் நடைபெற்றது. இதன்போது, இந்திய நிதி அமைச்சர் இலங்கையின் இயற்கை வளங்கள், மனிதத் திறமைகளை பாராட்டினார். இந்தியாவின் மாறிவரும் பொருளாதாரத்துடன் நெருக்கமாக ஈடுபடுவதன் மூலம் இலங்கையும் இந்த பலங்களை அடைய முடியும் என்று கூறினார். அத்துடன், இந்தியா போன்ற பெரிய சந்தையை வாய்ப்புகளை அணுகுவதன் மூலம் இலங்கையின் தொழில் துறையை வேகமாக முன்னேற்றம் காணச் செய்ய முடியும். வலுவான உள்நாட்டு தொழில் துறைகள் மூலம் இலங்கையின் பொருளாதார இறையாண்மையை மேம்படுத்திக் கொள்ள முடியும் - என்றும் கூறினார்.

2022இல் ஏற்பட்ட நெருக்கடியின்போது 400 கோடி டொலரை இந்தியா வழங்கியமைக்கு நன்றி தெரிவித்தார். அத்துடன், தொழில்துறை கொள்கை மற்றும் டிஜிற்றல் ஆளுகை தொடர்பில் இந்தியாவின் சாதனைகளை பாராட்டியதுடன், ஒப்பீட்டு ரீதியாக நிலைத்தன்மை காணப்பட்ட போதிலும், இலங்கை இன்னும் வெளிநாட்டு கையிருப்புகளை மீண்டும் கட்டியெழுப்புதல், ஏற்றுமதிகளை பன்முகப்படுத்தல் மற்றும் வறுமை ஒழிப்பு உள்ளிட்ட முக்கிய சவால்களை எதிர்கொண்டு வருகிறது என்றும் கூறினார்.

மேலும், வெளிப்படையான மற்றும் நம்பிக்கை அடிப்படையிலான ஒத்துழைப்பின் அவசியப்பாடு தொடர்பில் இரு தரப்பினரும் இங்கு இணங்கிக் கொண்டனர். நவீன வர்த்தக யதார்த்தங்களுக்கு ஏற்றவாறு இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்வதற்கும் இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் அழைப்பு விடுத்தார்.

## அரசாங்கத்தின்...

இந்தச் சந்திப்பின்போது, நாட்டில் பொருளாதார, அரசியல் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டுவதன் மூலம் இலங்கையை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வர அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகளை பேராயர் போல் ரிச்சர்ட் கல்லாகர் பாராட்டினார்.

மேலும், பொருளாதாரத்தை உறுதிப்படுத்தவும் தேசிய ஒற்றுமையை மேம்படுத்தவும் இலங்கை மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் வத்திக் கான் தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் அவர் உறுதி தெரிவித்தார்.

இலங்கைக்கும் வத்திக்கானுக்கும் இடையில் நிலவும் அரை நூற்றாண்டுகால இராஜதந்திர உறவுகள் குறித்து ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க குறிப்பிட்டார். இந்த உறவுகள் இலங்கைக்குப் பல நன்மைகளைப் பெற்றுத் தந்தன என்றும் இது ஆன்மீக ரீதியானது மட்டுமல்லாமல், நாட்டில் மனித கண்ணியத்தை மேம்படுத்துவதில் மிகவும் முக்கியமானதாக அமைந்ததாகவும் - இதற்காக வத்திக்கானுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.(ஐ)

## மாவீரர்...

திருவுருவ படங்களை பயன்படுத்தியமை குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாட்டு பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு வரும் சூழலில் கடந்த ஆண்டில் நடத்தப்பட்ட மாவீரர் நினைவேந்தல் தொடர்பிலான குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மன்னாரில்...

இரண்டு கருத்திட்டங்களான, விண்ட்ஸ்கேப் மன்னார் லிமிட்டெட்டின் 20 மெகாவாட் திட்டம் எதிர்வரும் டிசெம்பரிலும் ஹேலீஸ் பென்டோனின் 50 மெகாவாட் திட்டம் 2026 டிசெம்பரிலும் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

எனினும், அங்கு எழுந்த மக்களின் எதிர்ப்பு போராட்டங்கள் காரணமாக இந்தக் கருத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலை இடைநிறுத்தும் ஒரு சூழல் ஏற்பட்டது.

இந்த நிலையில், பிரதேச மக்கள் முன்வைத்த சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்னைகளைக் கருத்தில் கொண்டு, குறித்த தீவில் காற்றாலை மின் உற்பத்தி கருத்திட்டத்தை மன்னார் தீவு மக்களின் விருப்பத்துடன் தொடர்ந்து நடைமுறைப்படுத்தவேண்டும் என ஜனாதிபதி அநுர குமாரவால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வலுசக்தி அமைச்சரால் அமைச்சரவைக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில் அதற்கமைய, நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கமைய, மூன்று திட்டங்களுக்கு மேலதிகமாக வேறு காற்றாலை திட்டங்கள் அங்கு நடைமுறைப் படுத்தப்படமாட்டாது எனவும், அவ்வாறு அமைப்பதாயின் அதற்கு பொருத்தமான மாற்று இடம் தெரிவுசெய்யப்படும் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ-ஐ)

## போதைப்பொருள்...

போதைப்பொருள் மாபியாக்கள் உட்பட குற்றச் செயல் களில் ஈடுபடும் தரப்புகளை துடைத்தெறிவோம் - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாண மாவட்ட செயலகம், சாவகச்சேரி பிரதேச செயலகம் இணைந்து நடத்திய நடமாடும் சேவை சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில், உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "போதைப்பொருள் விற்பனையாளர்கள், கஞ்சா கடத்துபவர்கள் மற்றும் வாள்வெட்டு குழுவினரால் யாழ். மாவட்டம் சீரழிந்து வருகிறது. எனவே, இவற்றுக்கு முடிவு கட்டி, சுமுக நிலைமையை தோற்றுவிக்குமாறு யாழ். மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர். தற்போது போதைப்பொருள் கும்பல் மற்றும் பாதாள குழு உறுப்பினர்களின் செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு வருகிறது.

போதைப்பொருளுக்கு எதிரான கூட்டு நடவடிக்கை நாடு தழுவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பாதாள குழு பின்னணியில் கறுப்பு நிர்வாக பொறிமுறையொன்றே உள்ளது. இதற்கு உதவும் சில நபர்கள் எல்லா இடங்களிலும் இருக்கவே செய்கின்றனர். இதன் பின்னணியில் கறுப்புப் பணம் புகுந்து விளையாடுகின்றது. இந்த நிலைமையை கண்டும் காணாததுபோல் இருக்க முடியாது. அது எமது இளைய தலைமுறையினருக்கு இழைக்கும் பெரும் துரோகமாகும். எனவே, யுகத்துக்கு முடிவு கட்டப்படும். மக்களால் சட்டப்பூர்வமாக செயல்படும் அரசாங்கம்தான் நாட்டை ஆளவேண்டும். கறுப்பு உலகத்தால் நிர்வாகத்தை முன்னெடுக்க இடமளிக்க முடியாது - என்றார். (ஐ)

## பயங்கரவாத...

வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு விரைவில் வெளிப்படுத்தப்படும் என்றும் நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம், ஐ. நா. மனித உரிமைகள் பேரவை என்பன அரசாங்கத்துக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றன. அரசாங்கமும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நிறைவுறுத்த போவதாகவும் அதற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை முன்மொழியவுள்ளதாகவும் உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ்...

கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் அனைத்து மத்திய குழு உறுப்பினர்களையும் கட்டாயம் சமுகமளிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், மாகாண சபைகள் தேர்தல், அரசியல் தீர்வை வென்றெடுப்பதற்கான நகர்வுகள் உட்பட முக்கிய பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படும் என்று கூறப்படுகிறது.

இதேவேளை, அரசாங்க தரப்பை இலங்கை தமிழ் அரசுக் கட்சி விரைவில் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 950 கிலோ...

மேலதிக நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளின்போது கைப்பற்றப்பட்ட கஞ்சா போதைப்பொருட்கள் சான்றுப் பொருளாக நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நிறைவுற்றமையை தொடர்ந்து, சான்றுப் பொருளான 950 கிலோ கஞ்சாவையும் தீயிட்டு அழிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இதன்படி, கோம்பயன் மணல் மயான மின் தகன மேடையில் இவை தீயிட்டு அழிக்கப்பட்டன. யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான், மேலதிக நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஆகியோரின் நேரடி கண்காணிப்பில் இந்த கஞ்சா போதைப்பொருள் அழிக்கப்பட்டது. (ஐ)

## நிதி அமைச்சின்...

ஆணைக்குழுவால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

2015ஆம் ஆண்டு அரச வர்த்தக கூட்டுத்தாபனம் ஊடாக 50 தற்காலிக கூடாரங்களை கொள்வனவு செய்ததன் மூலம் 9 கோடியே 96 இலட்சத்து 79 ஆயிரத்து 799 ரூபாய் அரசாங்கத்துக்கு இழப்பு ஏற்படுத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டில் சரத் ரத்வத்த கைது செய்யப்பட்டார்.

கைதான சரத் ரத்வத்த நேற்றைய தினமே நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார். இவர், 2015 - 2018 காலப் பகுதியில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மூத்த ஆலோசகராகப் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 2020ஆம் ஆண்டு கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்கு மணிக்கு 2 ஆயிரம் கிலோ மீன்களை பொதியிடும் இயந்திரத்தை (பெக்கும் சீலர்) தேவைப்பாடு இல்லாமல் கொள்வனவு செய்து அரசாங்கத்துக்கு 58 இலட்சத்து 56 ஆயிரத்து 116 ரூபாய் நட்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர். (ஐ)

## இளம் குடும்ப...

பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இ. சிந்துஜா வயது 25 என்ற ஒரு பிள்ளையின் தாயே கொலையானார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நேற்று காலை கொலையான பெண் தனது கணவர், குழந்தையுடன் இருந்துள்ளார். பெண்ணின் தாயார் பணி நிமித்தம் வெளியே சென்றுள்ளார். அவர் நேற்று மாலை வீட்டுக்கு திரும்பியபோது மகள் கழுத்தில் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்ட நிலையில் இறந்து கிடந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 60 ஆயிரம்...

கடந்த வரவு - செலவு திட்டத்தின்போது அறிவிக்கப்பட்டபடி 30 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்ப ஏற்கனவே ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. தற்போது ஆட்சேர்ப்பு நடந்து வருகிறது.

நிர்வாக சேவை, பொறியியல் சேவை, திட்டமிடல் சேவை, கணக்காளர் சேவை போன்ற முக்கிய துறைகளில் அவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கான செயல்திட்டம் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உபகுழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 226 பேர் பொறியியல் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## காரைநகர்...

மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலை தொடர்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மருந்தகம் ஒன்றின் உரிமையாளரான 51 வயது நபரும் அவரின் உதவியாளரான 32 வயது நபரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடமிருந்து 30 இலட்சம் பெறுமதியான தங்க நகைகளும் கைப்பற்றப்பட்டன. அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையைத் தொடர்ந்தே பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கொலையான பெண், கடந்த ஒக்ரோபர் 11ஆம் திகதி வவுனியாவிலுள்ள உறவினர் வீட்டுக்கு செல்வதாகக் கணவரிடம் கூறிவிட்டு வீட்டிலிருந்து வெளியேறியிருந்தார். இந்த நிலையில், மறுநாள் 12ஆம் திகதி சங்குப்பிட்டி கடலில் அவரின் சடலம் மீட்கப்பட்டது.

தலையில் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு, முகம் உள்ளிட்ட பாகங்களில் எரியக்கூடிய திரவம் ஊற்றப்பட்ட நிலையில் கடலில் வீசப்பட்டமையால் நுரையீரலில் நீர் புகுந்து - மூச்சுத்திணறலால் அந்தப் பெண் உயிரிழந்தார் என்று உடல்கூராய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# நாட்டில் புதிதாக அமைந்த 8 இலட்சத்து 22,801 வீடுகள்!

## வடக்கு மாகாணத்தில் மிகக்குறைவு

கொழும்பு, நவ. 05

**இலங்கையில் இறுதியாக மக்கள் தொகை மற்றும் வீட்டு கணக்கெடுப்பு 2012ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டது.**

இதையடுத்து 12 ஆண்டுகளுக்குப் பிறகு 2024 இல் மக்கள் தொகை மற்றும் வீட்டு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதன்படி, 2012 மற்றும் 2024 இற்கு இடையில் வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 822,801 அதிகரித்துள்ளது என்று மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் துறை தெரிவித்துள்ளது.

2024 மக்கள் தொகை மற்றும் வீட்டு கணக்கெடுப்பின் தகவல்களின்படி,

இலங்கையில் மொத்த வீடுகளின் எண்ணிக்கை 6,030,541 ஆகும். இதில், அதிக எண்ணிக்கையிலான வீடுகள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளன. நாட்டின் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான வீடுகள் வடக்கு மாகாணத்தில் பதிவாகியுள்ளன.

2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, இலங்கையில் குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை 5,207,740 ஆக இருந்தது, மேலும் 2024 ஆம் ஆண்டு மக்கள் தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பில், அந்த எண்ணிக்கை 6,030,541 ஆக அதிகரித்துள்ளது.

2012 மற்றும் 2024 இற்கு இடையில், வீட்டுவசதி அலகுகள் 822,801 அதிகரித்துள்ளது. இது 15.8 வீதமாக பதிவாகி உள்ளது.

நாட்டில் அதிக வீட்டு அலகுகளின் எண்ணிக்கை கம்பஹா மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளன. அந்த எண்ணிக்கை 688,635 ஆகும்.

மன்னார் மாவட்டத்தில் மிகக் குறைந்த வீட்டுவசதி அலகுகள் பதிவாகியுள்ளன. இது எண்ணிக்கையில் 32,330 வீடுகளாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# அம்பலாங்கொடையில் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் நேற்று மரணம்!

கொழும்பு, நவ. 05

அம்பலாங்கொடை நகர சபை வளாகத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இனந்தெரியாத தரப்பினர் ரி-56 ரக துப்பாக்கியினால் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றனர் என தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபர், 54 வயதுடைய நிலந்த வருஷ விதான என தெரியவந்துள்ளது.

இவர், போதைப்பொருள் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய கரந்தெனிய சுத்தா என்பவரின் மைத்துனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், இவர் அம்பலாங்கொடை - மோதர தேவாலயத்தின் தலைவர் பதவியையும் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# வத்திக்கான் வெளியுறவு அமைச்சர் பிரதமர் ஹரிணியை சந்தித்து பேச்சு

கொழும்பு, நவ. 05

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள வத்திக்கானின் நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடனான உறவுகளுக்கான வெளியுறவு அமைச்சர் பேராயர் போல் ரிச்சர்ட் கல்லாகர் பிரதமர் ஹரிணி அமரசூரியவைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன் தினம் திங்கட்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

வத்திக்கான் வெளியுறவு அமைச்சர் உள்ளிட்ட தூதுக் குழுவில் கொழும்பில் உள்ள பேராயர் தூதரகத்தின் பொறுப்பாளர் மொன்சிக்னோர் றொபேர்ட்டோ லுச்சினி மற்றும் பேராயர் வெளியுறவுச் செயலகத்தின் இரண்டாவது செயலாளர் மொன்சிக்னோர் டோமிஸ்லாவ் ஜூபாக் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (அ)

# சாதனை படைத்த சுற்றுலாத்துறை

கொழும்பு, நவ. 05

இலங்கையின் சுற்றுலாத்துறை ஒக்ரோபர் மாதத்தில் சாதனை படைத்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி கடந்த ஒக்ரோபர் மாதத்தில் 165,193 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இது 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21.5 வீத அதிகரிப்பாகும் என அந்த அதிகார சபை வெளியிட்டுள்ள தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் மாதத்தில் இந்தியாவில் இருந்து 48,113 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

அதன்படி ஒக்ரோபர் மாத இறுதி நிலவரப்படி, 2025 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த வருகை 1,890,687 ஆக பதிவாகியுள்ளது.

இதற்கமைய 2025 ஜனவரி முதல் ஒக்ரோபர் வரை, இந்தியாவிலிருந்து 423,405 சுற்றுலாப் பயணிகளும், இங்கிலாந்திலிருந்து 174,827 சுற்றுலாப் பயணிகளும், ரஷ்யாவிலிருந்து 133,640 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனி 116,741 சுற்றுலாப் பயணிகளும், சீனா 112,454 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வந்துள்ளனர். (அ)

# கூட்டு எதிர்க்கட்சி பேரணியில் நாங்கள் பங்கேற்கமாட்டோம்!

## மனோ கணேசன் அறிவிப்பு

கொழும்பு, நவ. 05

நவம்பர் 21 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டு எதிர்க்கட்சி பேரணியில் தனது கட்சி பங்கேற்காது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களிடம் பேசிய மனோ கணேசன், சில காரணங்களால் நாம் பேரணியில் பங்கேற்கமாட்டோம் என்று கூறினார். ஆனால் அந்த காரணத்தை அவர் குறிப்பிடவில்லை.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் முடிவு குறித்து தனக்கு உறுதியாக தெரியவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுடனான பிரச்னைகள் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டது என்ற கருத்துக்களை மறுத்த மனோ கணேசன், எந்த அரசியல்வாதிகளுடனும் எந்தப் பிரச்னையும் இல்லை என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் தோளைப் பிடித்துக்கொண்டு, அவர்கள் அனைவரும் நல்ல நண்பர்கள் என்று கூறிய எம்.பி. கணேசன், "அனுரவும் எனக்கு நல்ல நண்பர்" என்று கூறினார். (அ)

# தமிழக இராணுவ இரகசியங்களை திருடினரா இலங்கைத் தம்பதியர்?

சென்னை, நவ. 05

தமிழகத்தில் இராணுவ இரகசியங்களைத் திருடுவதற்குத் தீவிரவாதிகளுக்கு உதவியாக இருந்த இலங்கை மற்றும் மலேசியாவைச் சேர்ந்தவர்கள் மீதான வழக்கு நவம்பர் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தமிழக ஊடகமொன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இராமநாதபுரம், உச்சிப்புளி பகுதியில் மலேசியக் குடியுரிமை பெற்ற ஒருவர் நடத்திய, விருந்தகத்தில் பணியாற்றிய இலங்கை, கொழும்பைச் சேர்ந்த தம்பதியினர் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக இருந்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவர்கள் 2015 முதல் 2021 ஆம் ஆண்டு வரை, அங்கு சட்டவிரோதமாக தங்கியிருந்த நிலையில், ஆதார் அட்டை மற்றும் சிம் அட்டைகளை பெற்றுள்ளனர்.

அத்துடன், அந்த ஆவணங்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய பாகிஸ்தான் பிரஜை ஒருவரிடம் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து குறித்த நபர், அதை பயன்படுத்தி இராணுவ இரகசியங்களைத் திருடியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்த தகவல் அறிந்த பொலிஸார் கடந்த 2021ஆம் ஆண்டு இலங்கை தம்பதி, விருந்தக உரிமையாளர் மற்றும் பாகிஸ்தான் நபர் மீதும் வழக்கு பதிவு செய்தனர்.

எனினும், இராணுவ இரகசிங்களை திருடிய பாகிஸ்தானியர் தலைமறைவாகியுள்ளார்.

இந்தநிலையில், இலங்கை தம்பதியினர், திருச்சியிலுள்ள இலங்கை கைதிகளுக்கான சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (அ)

# தொடர்ந்தும் அரசுக்கு கடன் வாங்கும் நிலை!

## கொழும்பு பல்கலை பேராசிரியர் பிரியங்க



கொழும்பு, நவ. 05

தற்போதைய அரசாங்கம் பாதீட்டுப் பற்றாக்குறையை படிப்படியாகக் குறைத்தாலும், கடன் வாங் கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கொழும்புப் பல்கலைக் கழகத்தின் பொருளியல் ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் அரசாங்கம் அதிக கடன் வாங்கியதாக வெளியாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த அரசாங்கம் கடன்களைப் பெறுவது பெரும்பாலும் உள்நாட்டு மூலங்களிலிருந்தே ஆகும்.

இதற்குக் காரணம், கடன் நெருக்கடியால் வெளிநாட்டு நிதிச் சந்தைகளுக்கோ அல்லது இருதரப்புக் கடன் வழங்குநர்களிடமிருந்தோ கடன்களைப் பெறும் திறன் மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளது.

பலதரப்பு நிறுவனங்கள் கூட முன்பைவிட குறைந்த சலுகை வட்டிக் கடன்களையே இப்போது வழங்குகின்றன.

வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை நிலவும் நிலையில், அரசாங்கம் கட்டாயம் கடன் வாங்கவேண்டியுள்ளது.

இந்த அரசாங்கத்தின் கீழ் அதிக கடன் வாங்கியதாக நான் காணவில்லை.

ஏனெனில், பாதீட்டுப் பற்றாக்குறை படிப்படியாகக் குறைந்து வருகிறது. அதேபோல், 2026 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் கடன் இலக்குகளைப் பார்க்கும்போது, கடன்களைக் குறைப்பதையே அது காட்டுகிறது.

எனவே, குறுகிய காலப்பகுதியில் அதிக கடன் வாங்கிய அரசாங்கம் இது என்று ஒரு அறிக்கைக்குத் தேவையான ஆதாரங்களை எங்களால் வழங்க முடியும் என்று நான் நம்பவில்லை-என்றார். (அ)

# நாட்டில் அதிகரிக்கும் வட்ஸ்-அப் மோசடிகள்!

கொழும்பு, நவ. 05

வட்ஸ்-அப் ஊடாக பணம் கோரும் மோசடிகள் அதிகரித்துள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு இதுபோன்ற முறைப்பாடுகள் அதிக அளவில் கிடைத்துள்ளதாக அதன் உதவி பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.ஜி.ஜயனெத்சிறி தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், வட்ஸ்-அப் கணக்குகளைப் பயன்படுத்தும்போது, பயனர்கள் மோசடிகள் குறித்து அதிக அவதானத்துடன் செயற்படுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org